ஆண்டவன் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பம்செய்த இந்த

மதம் ஜாதி பேதகமென்றில்லா

பொதுநல நீதிகளைக்கூறும்

4, 5, 6 ஆக மூன்றுபாகம் சேர்ந்த

# சர்வமத சமரஸபோதினி.

இதனை

வாலாஜா தாலுக்கா மேல்விஷாரம் கடைக்கார

அப்துல்கனீ சாகிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபு

அவர்களால் கோர்வைசெய்து

கும்பகோணம் மஹாகனம்

ஆலீஜனாப், வ. காதிர்பாஷா ராவுத்தர் அவர்கள்

பொருளுதவியின் முயற்சையால்

ஆரணி:

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பட்டது.

முதற்பதிப்பு. 1932-ம் வூ செப்டம்பர் மீ

[Registered] [Copy right.

இதனை :—கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் புக்ரிஜிஸ்தர் சட்டப் படிக்கு ரிஜிஸ்தர் செய்திருக்கிறதென்பதை அச்சுக்கூடத் தலைவர்கட்கும் புஸ்தக வியாபாரிகட்கும் இதனால் தெரிவிக்கப்பட்டது.

இங்ஙனம்,

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம்,

மேல்விஷாரம் P. O., வடார்க்காடு.

4 OCT 1932

Q
N32 . 4 6 .
42284

4 OCT 1932

இஃது

மதம் ஜாதி பேதகமென்பில்லா

பொதுநல நீதிகளைக்கூறும்

# சர்வமத சமரஸபோதினி.

நான்காம்பாகம்

இதனை

வாலாஜா தாலுக்கா மேல் விஷாரம் கடைக்கார

அப்துல் கனீ சாகிபவர்கள் குமாரர்

(அஹ்ஸன்) க. முஹம்மது இப்ருஹீம் சாகிபு

அவர்களால் கோர்வைசெய்து

வாலாஜா தாலுக்கா மேலகுப்பம் மளிகை

ஆலிஜனுப், மி. காதர்பாக்ஷா சாகிபவர்கள்

பொருளுதவியின் முயற்சியால்

ஆரணி,

ஸ்ரீ கணேஸர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.
1932வருஷம்
ஆகஸ்டுமீ

பாகம் 1-க்கு 0—1—6
பாகம் 6-க்கு 0—8—0
வி. பி. செலவு வேறு.

இஃது

மதபேதகமில்லா பொதுநல நீதிகளைக்கூறும்

# சர்வமத சமரஸ போதினி.

## நான்காம் பாகம்.

---

### காப்பு விருத்தம்.

சர்வமத சமரஸநூல் சதுர்பாக மாமிதிலே
பர்வதம்போல் குடும்பசாம் பண்பறியா மானிடர்கள்
மர்மங்கள் பலதறிய மணமாக மவுல்வதற்குப்
பர்ப்பலதும் படைத்தாளும் பராபரனே நீகாப்பு. (1)

### அவையடக்கம்.

---

மெஞ்ஞானத் - தங்கமெட்டு.

எல்லாம் ஜோடியாக இதமாய் படைத்தாள
சல்லாப மாய்தனித்த, ஆண்டவனே
சங்கையுடன் போற்றியே, திருநபியை
அங்கமுடன் வாழ்த்தியே. (2)

ஆவியுமுடலும்போ லன்பொடு பாரிபத்தா
மேவியே வாழாபலர், என் அன்பரே
மேதினியி லுற்றார்களே, அவர் குடும்பம்
நீதிகளை மறந்தார்களே. (3)

பல்லும் நாவும் போல பக்ஷமாய் பாரிபத்தா
தொல்லுல கில்நடக்கா, தென் அன்பரே
துன்பத்தி லாழ்ந்தார்களே, குடும்பரசின்
இன்பத்தை இழந்தார்களே. (4)

அவர்க ளிடற்செயலால் ஆண்டவன் கோபத்தால்
நவமற்று வாழ்குடும்பம், என்அன்பரே.
நலமாய்ப் பெருகிடவே, உபதேசம்
பலநல மருள்தேடியே. (5)

குடும்பசிற் றரசதைக் கொண்டானுங் கோதையரும்
அடுக்குடன் நடத்துதற்கு, என் அன்பரே
அன்பாயிச் சிறுநூலிதே, நேசரே
தென்பா யுரைத்திடவே. (6)

மிகவாசந் தீனவர் மேல்விஷா ரம்நகர்
அகமகிழ்வொடு கடைக்கார், அப்துல்கனீ
அவர்மகன் அஹ்ஸனிதே, அன்புடன்
நவமாயுரைத் தானிதே. (7)

அன்புப் பிரியத்துடன் ஆண் பெண்கள்யாவரும்
இன்புடன் படித்துகந்தோர், இருலோகில்
ஏற்றமாய் வாழ்வார்களே, பிறருக்கும்
சாற்றவே சலிக்கார்களே. (8)

ஆண்டவன் மானிடற்கு அறிவை யுணர தந்து
நீண்டக் குடும்பத்தரசை, நேர்மையுடன்
நிலமிசை நடத்தாட்டவே, அஹ்ஸனுட
பிலமாம் பிரார்த்தனை யிதே. (9)

149784

## ஆனந்தக் களிப்பு.

### பல்லவி.

மன்னராள் அரசைப்போல் குடும்பம் அதின்
நன்னய மறியார்க ளெடுப்பாரே துன்பம். (மன்ன)

### சரணுனு பந்தம்.

(10) பாராளுமரசைப்போல் குடும்பம் புருஷ
பாரியொற்றுவாழக் காட்டாமல் டம்பம்
சீராட்டத் தொடுவாழ இன்பம் இதை
சீர்தூக்கி யுணரார்க்கு என்றுமே துன்பம். (மன்ன)

(11) இடும்புச் செய் நாரதன் பாவீ என்று
மிடர்களை செய்திட எம்மிட மேவீ
குடும்பத்தை யுடைக்கவே லோபீ சூர்ந்துக்
கொண்டாட்டங்கொள்வதைக்கேளுங்கள் தாவீ.(மன்ன)

(12) குடும்பத்தை யரசைப்போ லன்பாய் சூர்ந்துக்
கூடிப் புருஷனும் பெண்டீரு மின்பாய்
வடுவர வாழ்வோரை முன்பாய் வாட்டி
வாதாடச்செய்தவன் காண்பானே தென்பாய். (மன்ன)

(13) நாரதன் வலைப்பட்டோர் பாட்டை நவில
பாரதம் போல்நீளு மவனுட சேஷ்டை
வீரம்வீ ராப்பாலே கோஷ்டை விளைத்து
வேடிக்கைப் பார்க்கவே யவனுட தேட்டை. (மன்ன)

(14) பாதகன் வலைசிக் கிடாமல் பாரில்
பத்தாபாரியர்கள், வீணுய்க் கெடாமல்
சாதக முடன் வாழ்ந் திடாமல் சார்ந்தோர்
சாற்றுவதைக் கேளுங்கள்பிந் திடாமல். (மன்ன)

ஆக முதற்பாக மருபாக மூன்றும்பாகங் கூடி இம்மட்டிற் பாடல்கள் 314.

## 7 வது அத்தியாயம்.

### குடும்பரசு.

மெஞ்ஞான - தங்கமேட்டு.

பட்ட மரசாங்கம் வியாபார மதம்குடும்பம்
சட்டங்க ளெதற்கு முண்டு, என் அன்பனே
சட்டம் விட்டால் மட்டமடா, மட்டபடா
திட்டமா யுணர்வாயடா. (1)

எல்லாவற்றின் சட்ட மேதுந்தவிர துயர்
பொல்லாதடுக்கும் சிலநாள், என் அன்பனே
பொருந்திபின் னகலுமடா, அகன்றுமுன்
னிருந்தப்போ லணுகுமடா. (2)

குடும்ப சட்டமகன்றால் குறைகள் பலவிதத்தால்
அடுப்பது ஆயுள் மட்டும், என் அன்பனே
ஆராதப் புண்போலடா, அடுத்தென்றும்
தீராத நோய்போலடா. (3)

ஆகையினாற்குடும்ப மடவாகும் சட்டமதைத்
தோகையுந் துணைவன்காண, என் அன்பனே
துய்யசொற் கேட்பாயடா, கேட்டபடி
அய்தமா யுணர்வாயடா. (4)

உலகத்தரசுபோ லுற்றக் குடும்பரசு
நலத்தர சுக்கயர்போல், என் அன்பனே
நற்குடும்பத் தலைவரடா, கயர் தலைப்பை
சற்குணமாய் பிடிப்பதடா. (5)

சினத்தா லாளன்இழுக்க சினக்காமனைவிடுக்க
மனைவியது போலிழுக்க, குடும்பரசாம்
மணவாளன் விடுவதடா, கயரருக்கார்
குணமுடன் வாழ்வாரடா. (6)

குணமண முள்ளதொரு கோதைப் பரிதேசிக்கி
இணக்கமாய் கிடைத்துவிட்டால், என் அன்பனே
இவனோர் இராஜனடா, இவன் குடும்பம்
நவமாகப் பெருகுமடா. (7)

இடக்கு முடக்குபேசு மேந்திழை ராஜனுக்கு
இடராய் கிடைத்து விட்டால், என் அன்பனே
இவளேமன் அவனுக்கடா, இவன் பின்னே
கவனிப்பால் சுகமேதெடா. (8)

அவளை மணமுடித்து அடுத்தப்போ நலமுரைத்து
நவமாசை மனதில் வைத்து, என் அன்பனே
நங்கைக்கி பயமூட்டடா, பயமூட்டா
சங்கைபல ரிழந்தாரடா. (9)

முன்னாலே மனைவிக்கி முகங்கொடுத்த ஆளனவன்
பின்னால் படுந்துயரை, என் அன்பனே
பிரிக்கவே கேட்பாயடா, எவருமே
சிரிக்கவே செய்யாதெடா. (10)

ஆளன் குடும்பமது ஆலாய் வளர்ந்துவர
தாளன்தன் மனையாட்டியை, என் அன்பனே
தகுமாய் நடத்தலடா, நடத்தாமல்
வெகுபேர்கள் கெட்டாரடா. (11)

மனையாட்டி ஆளனுக்கு மாநிலத் தில்வேண்டும்
உனையகற்ற உரைக்கவில்லை, என் அன்பனே
உபாயமாய் நடத்தாட் டடா, நடத்தாட்
டபாய மணுகாதடா. (12)

மனையாளின் முகங்கோணு மதிப்போனின் மூக்கு குத்தி
வினைகயர் மாட்டியவள், என் அன்பனே
வீணில் இழுப்பாளடா, குடும்பத்தில்
பூணிஇடற் செய்வாளடா. (13)

வீட்டலுவற்பாராள் விரிப்புக் களைழக்கவராள்
தேட்டமாய் தாய்வீடுபோய், என் அன்பனே
தினம்வாது தொடுப்பாளடா, தொடுத்துந்தன்
மனம்வாடச் செய்வாளடா. (14)

உற்ருருரவினருமுவப்பாக பெற்றவரும்
மற்ருர்ன் மனங்கோணினும், என் அன்பனே
மனைவிமன மட்டுமேடா, மகிழ்வதற்கு,
வினைப்பயிர் விளைக்காதேடா. (15)

ஹவ்வாவின் சொற்கேட்டு ஆதம் நபீமுன்னல்
எவ்வாரு விசனமுற்ருர், என் அன்பனே
எற்றபதி விட்டாரடா, விட்டதற்கு
சாற்ற சாக்ஷி ஏனடா. (16)

அவர்மக்கள் நாமதுபோல் ஆயிழையாற் றுயர்மலைபோல்
தவராக சுமப்பதெல்லாம், என் அன்பனே
தையல் வலைப் பட்டதடா, குடும்பாசு
வையகத்தில் நலிவதடா. (17)

வல்லி வலையிற்சிக்க வம்புகடை வீடாகும்
சல்லிபாடு குணம்வருத்தி, குடும்பாசை
சங்கைகெட செய்யாதேடா, செய்திடில்
பங்கத்தி விழுக்குமடா. (18)

இழப்பது உன்மட்டு மிருந்தாலும் மிருக்கட்டும்
பழதுன்மேல் பகர்ந்துரவார், குடும்பத்தைப்
பரிகாசஞ் செய்வாரடா, செய்திடா
மரியாதி யினைநாடடா. (19)

ஆணகப் பிறந்தானை அலைமலைய ஆட்டும்
வீணாளால் குடும்பமெல்லாம், என் அன்பனே
விசனததி லடர்வதடா, அடருவது
நிசமென் றுணர்வாயடா. (20)

கடுகடுத் துப்பேசுங் கன்னிகை வார்த்தையினல்
அடுக்கான குடும்பமதும், என் அன்பனே
அடிகுலேந் தகலுமடா, அகன்றவன்
வடிவுங் குலேயுமடா. (21)

பாழுங் குணத்துடைய பாதகிக்கி மெத்தைகட்டி
வாழும்படி யாய்வைப்பது, குடும்பத்திலே
வங்குரங்குக் கொப்பாடமா, வையகத்தார்
எங்குமுன்னே இகழ்வாரடா. (22)

புத்தியுள் ளாள்கார்ட்டை புகழ்வீடா யாக்கிடுவாள்
புத்தியில்லாள் வாழவீடதை, என் அன்பனே
போர்வனஞ் செய்வாளடா, குடும்பத்தை
சீர்கெடத் துணிவாளடா. (23)

கணவன் பயமனதில் கருதாப்பெண்டீர் இடரை
மணவ னறிந்து திருத்த, குடும்பமது
மணமாகப் பெருகுமடா, மாதர்கொடுங்
குணங்கூரக் கேட்பாயடா. (24)

இல்ல மிருபேரை இயல்பாய் விளங்கவைக்கா
வில்லங்கம் விளேயவைப்போள், குடும்பத்தில்
வீண்வம்புக் காரியடா, வீணிலவள்
ஆண்மனதைக் குலேப்பாளடா. (25)

காலேயி லேஎழுந்துக் கடவுளேத் துதித்தில்லம்
வேலேப்பா ராதுயில்வோள், குடும்பத்தில்
வீராப்புக் காரியடா, அவளாலே
சீராட்ட மணுகாதடா. (26)

குளிர்ந்த முகம்பேச்சுங் குணமு மணமுடனே
களிப்பில்லாக் கடுமுகத்தாள், குடும்பத்தில்
கணேவியாய் கருதாதேடா, கருதியே
துணேவியாய் எண்ணுதேடா. (27)

மணவ னவன்பதர மணையா ளவள்கதர
சுணங்கன்போல் குலத்திருந்தால், குடும்பத்தின்
சுகவீடு காடாமடா, உப்பில்லா
சுகபோஜ னம்போலடா. (28)

விடிந்து எழுந்துபல்லை விளக்கா விச்சவாயால்
தடித்தனமா யுண்பவள், குடும்பத்தில்
தரித்திரம் பிடித்தோளடா, என்பதற்கு
சரித்திர மிதற்கேனடா. (29)

போகம் புரிந்ததின்பின் பொய்யுலகர்க்கஞ்சி
தேகவடு வாகுளிக்காள், குடும்பத்தில்
திரபீடைப் பிடித்தோளடா, அவளாலுன்
உரசம்பத் தகலுமடா. (30)

சுத்திசோர் இடுமென்று சுபவார்த்தை முன்னோர்கள்
புத்தியாய்ந் துரைத்ததுவை, குடும்பரசிப்
பூவையவட் குரைப்பாயடா, உரைக்கசுகம்
பாவையால் பெருவாயடா. (31)

வீடுவாயல்சுத்தி வேணமட்டு முடல்சுத்தி
ஆடைசுத்தி யார்குடும்பம், என் அன்பனே
அலங்காரத் தைப்பாரடா, அவர்களுட
கலங்கா வாழ்வைக் காணடா. (32)

சுத்தமில் லாரில்லம் சூட்டுந்துகில் வீச்சம்
பத்தியுள் ளார்குடும்பம், என் அன்பனே
பரதவிப் பைக்காணடா, பரதவித்தேன்
சிரமத்தை எடுப்பதடா. (33)

வாழ்மனை என்றுரவார் வரவைக்கண் டுபசரியாப்
பாழ்விட்டைப் போலடைப்போள், குடும்பத்தில்
பரிதேசி யவளாமடா, பாதகியால்
மரியாதைப் போகுமடா. (34)

மணவனைப் பெற்றோர்முன் மடக்காமல் கால்நீட்டி
கணக்கு வழக்குரைப்போள், குடும்பாசில்
கடைகெட்ட நாரியடா, நாரியவள்
தடைக்கஞ்சா அரவமடா. (35)

மாலைபோல மாமிபேரில் மாபாவி குறைதேடி
தலையணை மந்திரஞ் செய்வோள், குடும்பத்தில்
தலைவாங்கி மகளாமடா, தையலவள்
வலைபட்டுத் துள்ளாதேடா. (36)

அந்திபோய் அல்லலுடன் ஆளன்வர சந்தியிலே
வந்தவுடன் வம்புதொடுப்போள், குடும்பாசில்
* வல்லியல்ல வல்லிமடா, வாழுமுயிர்க்
கொல்லியவ ளாகுமடா. (37)

அண்டை வீட்டில் நுழைந்து சுண்டுகரிபதம் பார்த்து
கண்டபடி கணவனைக் காய்வோள், குடும்பாசில்
கன்னியல்லக் கரடியடா, கரடியுடன்
உன்னிமனு வாழாரடா. (38)

உண்டான போதுணரா திண்டாட்டஞ் செய்துபின்னே
கொண்டான்மேற் குறைகூறுவோள், குடும்பாசில்
கோதையல்லப் பெரும் பேயடா, அவளென்றும்
வாதையை விளைப்பாளடா. (39)

அடிக்கா வைப்பாகுரையா ஆடுமாடை சாக்கிட்டு
தடித்தனஞ் செய்பாதகி, குடும்பாசில்
தட்டுவா ணிதானடா, திருத்தாமற்
கெட்டுநீ போகாதேடா. (40)

ஆளன்மேல் கோபித்து அவன்மக்களை முனிந்துக்
காளைமாடு போல்சீறுவோள், குடும்பத்தில்
காட்டின் மிருகமடா, மிருகமுள்ள
வீட்டிலெவர் வசிப்பாரடா. (41)

ஆணு லாகட்டுமென்று ஆளனைமதியாமல்
பேனுப்போல் குலைத்திடுவோள், குடும்பத்தில்
பீரங்கிக் கொப்பாமடா, அவளாலுன்
வீரியங் குன்றுமடா. (42)

* வல்லியம் என்பது ' புலி என்றறிக.

மடியிற் கையைபோட்டு மணவனே நடுத்தெருவில்
தடித்தனஞ் செய் பாதகி, குடும்பத்தில்
தண்டுபஜாரியடா, பஜாரிதனங்
கண்டு மலேக்காதெடா. (43)

இத்தாதித் துன்பங்கள் ஏந்திழை யாலடாரல்
பத்தாமுன் முகங்கொடுத்த, என் அன்பனே
பக்ஷத்தா லடற்வதடா, அடர்ந்திடா
லக்ஷணவாழ் வைக்கேளடா. (44)

அரிவைமேல் பக்ஷமுள்ளா னவளுக்கதையுரைக்கா
தரும்பக்ஷ முள்ளத்தில்வைத்து, குடும்பத்தை
ஒழுங்காய் நடத்தலடா, நடத்துவதில்
பழுதென்று மணுகாதடா. (45)

பாராமற் பயிருகெடும் பாக்கி கேளாமற்கெடும்
ஏ ராமற்சுவார் குதிரைகெடும், என் அன்பனே
இவன்மனைவி கெடுவதடா, இடற்திருத்தி
அவனடக்கி ஆளாதடா. (46)

ஒழுங்குத் தவரகண்டா லோங்கிதாங்கிப் பசுமாட்டை
பழுதில்லா கறக்குமாப்போல், குடும்பரசிப்
பாவைக்கி பயமூட் டடா, ஊட்டஉந்தன்
தேவைக்குட் படுவாளடா. (47)

ஆணிப்போன் நகைஎனு மழுக்கை எடுத்திடல்போல்
காணிக்கைக் கணவிஎனும், குடும்பத்திற்
கண்டாற் குரைதிருத்தடா, திருத்தபின்
திண்டாட்ட மணுகாதெடா. (48)

செக்கில் எள்ளேக்கசக்கா சீராய் நல்லெண்ணே தரா
கக்கிசங்கண்டால் திருத்தி, என் அன்பனே
கன்னியால் சுகங்கொள்ளடா, சுகங்கொள்ள
உன்னிப்பாய் கேட்பாயடா. (49)

உள்ளதை மனைவிக்கி உண்ணச்செய் துடுத்தாட்டுத்
துள்ளிபிறர் சொத்திலிட்டால், என் அன்பனே
துன்பத்தில் லாழ்வாயடா, ஆழ்வதுடன்
வீன்புத்தி ஒடுங்குமடா. (50)

அவளின்பாரங் குறையா ஆபரண மணிந்தாலும்
நவநகை ஆசைமட்டும், குடும்பரசின்
நங்கைக்கித் தீராதடா, தீர்ந்ததாய்
அங்கமுடன் சொல்லா ளடா. (51)

கல்ரத்ன நகைஎன்பாள் கம்மல்ஜூமிக்கி என்பாள்
நல்முத்து ஹாரமென்றே, குடும்பரசி
நாளும்சுறண்டுவாளடா, அவளாலே
நீளுந் துயரமடா. (52)

பெம்பாய் பனாரஸ் பிடவையும் சூரத்து
தம்மாஷு வேணுமென்பாள், என் அன்பனே
தரித்திரங் காணுளடா, தையலுன்
பரிதாப முணராளடா. (53)

கொடுத்தாலே புஞ்சிரிப்பு கொடுக்கா விட்டால்முறைப்பு
தொடும்நோயி சாக்குபோக்கப்போ, என் அன்பனே
மோகைக்கிச் சொந்தமடா, அவளுட
மாய்கையால் மயங்காதெடா. (54)

கண்ணாட்டி என்றவட்கு கருதியுற்றதை சொன்னால்
புண்ணாக்கி உன்மனதை, என் அன்பனே
புத்தியைத் துலைப்பாளடா, துலைத்துன்னை
நித்யம்நிந் திப்பாளடா. (55)

உள்ளதைப் பெண்டுக்கு ஒருபோது முரைக்காதே
வெள்ளைக்காகங் கதைபோல், என் அன்பனே
வீணாய் விளையுமடா, அதினாலே
காணாய் பலன்களடா. (56)

இன்னுமிதையுரைக்க இச்சிறு நூல்பெருகும்
நன்றுற்ற வார்த்தைமட்டும், என் அன்பனே
நங்கைக்கி சொல்லாதெடா, சொல்விடில்
பங்கத்தி லாழ்த்துமடா. (57)

கண்ணும் நிமைப்போல கணவன் கணைவியொற்றால்
விண்ணாரும்நிலா வெள்ளிபோல், என் அன்பனே
விருப்பம் இலங்குமடா, அவர்குடும்பம்
மருங்காய் ஜொலிக்குமடா. (58)

புருஷன் அரசனைபோல் பூவையாள் மந்திரிபோல்
குரும்பில்லா நீதிசெய்தால், என் அன்பனே
குடும்பரசுப் பெருகுமடா, பெருத்தது
நெடுநாள் நிலைக்குமடா. (59)

முக்கிய மாய்குடும்பம் முறைபெற வழியதுபெண்
பொக்கிஷம்போல் புருஷபாரி, என் அன்பனே
பொருத்தமா யிருப்பதடா, இருப்பதற்கு
கருத்துடன் கேட்பாயடா. (60)

ஆக அத்தியாயம் 7-க்கு கூடியபாடல்கள் 373.

## 8—வது அத்தியாயம்

## புருஷ பாரியர் பண்பு.

### மேஞ்ஞானத் தங்கமேட்டு.

புருஷனும் பெண்டிரும் பொருந்தியே வாழ்வதற்கு
அருமையாய் சிலமுறைகள், என் அன்பனே
அருளவே கேட்பாயடா, கோட்பதுபோல்
மருங்காய் நடப்பாயடா. (1)

மூச்சு முடலுமொற்று மூண்டிருந்தால் வைபோகம்
எச்சுடலின் மூச்சகன்றால், என் அன்பனே
ஏகுமுடல் சுடலுக்கடா, சுடலல்லால்
போகுமிட மில்லையடா. (2)

மணவாளன் மூச்சதுபோல் மனையாள் உடலதுபோல்
குணமூச்சைக் காத்தாலுடல், என் அன்பனே
கொண்டாட்ட முடலுக்கடா, மூச்சிருக்க
திண்டாட்ட மதற்கேதடா. (3)

கடவுள் அமானிதமாய் கன்னியரையாணுக்கு
அடவுட னமைத்ததினால், என் அன்பனே
அதையாய்ந்து நடத்தாட்டடா, இதையொரு
கதைஎன்றுக் கருதாதெடா. (4)

எல்லாம் ஜோடியாக இறையோ னமைத்ததுபோல்
நல்லார் மனுவாண்களே, என் அன்பனே
நங்கையர்க் கமைத்தானடா, அமைத்த தவன்
சங்கைமனுப் பெறதானடா. (5)

ஆண்களைப் பெண்கள்மே லதிகாரி யாக்கினதாய்
நீண்டோன் றன் வேதத்திலே, என் அன்பனே
நிட்சயஞ் சொன்னானடா, சொன்னதுவைப்
பட்சமா யுணர்வாயடா. (6)

அதற்குமாற் றாகபெண் ஆளன்மே லதிகாரம்
இதமாகச் செய்வதினால், என் அன்பனே
இழுவாகல் ஆளனடா, எவர்களும்
பழுதுகள் பகர்வாரடா. (7)

ஆணாகப் பிறந்ததோர் அதிகாரத்தால் மனையை
வீணாய்வ தைக்காதேடா, என் அன்பனே
வீணனென் றுரைப்பாரடா, இங்குமங்கும்
நாணங் குலைவாயடா. (8)

பெண்குணங் கோணலது பிறப்பவளி லாகுமது
கண்டுக் கலக்கமுறா, என் அன்பனே
கன்னியை சீர்திருத்தடா, திருத்துமுறை
உன்னிப்பாய் கேட்பாயடா. (9)

கோணல் எலும்பிலுற்றக் கோதையவ ளாகையினால்
காணநே ராக்கஉன்னால், என் அன்பனே
காணாது தோணாதடா, தோன்றிடினும்
வீணாம்பிர யாசையடா. (10)

பத்தாவும் பாரியரில் பாதையொரு வர்க்கடுக்க
எத்தாய் தனக்கடுத்தபோல், என் அன்பனே
இரக்கஞ்செய் யிருவரடா, என்னென்றும்
சிறக்கவே வாழ்வாரடா. (11)

கணவனுக் கிடரடுக்க கண்ணிலது பட்டதுபோல்
மணவன்மே லிறக்க முள்ளாள், என் அன்பனே
மங்கையில்நல் மங்கையடா, மருமையிலே
சங்கைமிகப் பெருவாளடா. (12)

வளைவா மெலும்பிலுற்ற வல்லியைநோக்க
உழைப்பெடுக்க ஒடியுமல்லால், என் அன்பனே
உற்றகோணல் நிமுராதடா, நிமிருமென்று
சற்றேனு முணராதெடா. (13)

அடிக்காம லேசாமல் அரிவையை தந்திரமாய்
நடத்தாட்டு மாளனவன், என் அன்பனே
நல்சொர்க்கம் புகுவானடா, புகுந்ததிலே
நல்வாசஞ் செய்வானடா. (14)

ஆண்டவனைப்பணிந்து அவள்பத்தாவையுகந்து
பூண்டப் பணிசெய்பவள், என் அன்பனே
பொற்பதியிற் புகுவாளடா, புகுந்தவள்
நற்கதிப் பெருவாளடா. (15)

மணவன் பொருத்தமில்லா மங்கைமரித்து விட்டால்
தணல்நர காழ்வாளென்றே, என் அன்பனே
தவத்தோர்கள் சொன்னாரடா, இதையவட்கு
நவமாக உரைப்பாயடா. (16)

பத்தா பாரிக்கிடையில் பாங்கில்லா குறையுற்றால்
எத்தாக புத்திசொல்லி, என் அன்பனே
இதமாக சீர்திருத்தடா, சீர்திருத்த
சிதராமல் வாழ்வாயடா. (17)

இருபாலர் நோயிலுர இவள்ஆளன் ஊருலவ
சிருமையுள்ள பாரியவள், என் அன்பனே
சினந்தேது முரைத்தாலடா, உரையதனை
மனத்திற்பதி வாக்காதெடா. (18)

கண்டால் சிறுகுறையை கல்லுந் தேங்காய்போல
துண்டா யொடித்துவிட்டால், என் அன்பனே
தொடர்ந்திடுந் துன்பமடா, துன்பத்துடன்
அடர்ந்திடும் ஆபத்தடா. (19)

குறைகண்டவுடன்கேளா குணமாய் பொருத்ததனை
முறைசுக வேளைகேட்டால், என் அன்பனே
மூண்டக்குறை யகலுமடா, அகல்வதுடன்
நீண்டசுக மாள்வாயடா. (20)

சந்தோஷ வேளையிலே சரசம்பாராட்டயிலே
அந்தக்குறை யாளன்கேட்டால், என் அன்பனே
அடிபணிந்து சொல்வாளடா, அவள் மனது
துடித்துகுறை யுரைப்பாளடா. (21)

ஓண்டியா யாக்கிடலும் உற்றபாலர் நோயதிலும்
தெண்டிப்பா யான்சொன்னது, என் அரசரே
தெரியாம லென்பாளடா, இந்ததவர்
அறியாமை என்பாளடா. (22)

மறந்திருப் பீரென்று மன்னவரே யானிருந்தேன்
மறக்காமல் கேட்டதேபோதும், என் அரசரே
மனம்பொருப்பீ ரென்பாளடா, எஜமானே
சினமகற்று மென்பாளடா. (23)

இதுபோல மனையாளை ஏசியுள்ளப் பத்தாவை
பதுமைஎன் றுய்தந்தையை, என் அரசரே
பாட்டுவிட்டீ ரென்பாளடா, பாட்டதனை
கேட்டுநொந்தே னென்பாளடா. (24)

அப்போ தாளன்கேட்டு ஆள்கள்மேல் கோபத்தோ
டொப்பபல் பாடுபட்டு, என் அன்னமே
உள்ளேவந்த தென்பானடா, அதுவுனக்
குள்ள தல்ல வென்பானடா. (25)

கோபத்தினு லெதுவோ கூறிவிட்டதாகுமதை
ஞாபிக்கா மறந்தாளென்று, என் அன்னமே
நாட்டங்கொண்டே னென்பானடா, அதைதொட்டும்
நோட்டஞ்செய்யா தென்பானடா. (26)

கேட்டவ ளெனைபெற்றோர் கிரையம்போ லென்னைதான்
தேட்டமுடன் கொடுத்துவிட்டார், அவர்செய்த
தீங்கேது என்பாளடா, கேட்டவனு
மேங்கிநய முரைப்பானடா. (27)

முட்டாளு பெண்ணே அதை முற்றுமறந்துவிடு
கட்டாய மினி ஏசிடேன், என் அன்னமே
காதலியே என்பானடா, உன்மனதை
பேதலிக்கா தென்பானடா.

இந்த விதபொருத்த மென்றென்று மேசிறக்கும்
விந்தையுணா ரார்கட்கென்றும், என் அன்பனே
வீடுவம்புக் கடையாமடா, அதைக்காண
காடுவாச மேலாமடா. (29)

கண்ணாள னென்றுன்னைக் கருதியே வந்தபெண்ணை
எண்ணாத் துயரில்விடல், என் அன்பனே
இதமல்லக் கேட்பாயடா, கேட்டென்றும்
பதனமாய் நடத்தாட்டடா. (30)

தண்ணீர் வற்றவற்ற தயங்குமே மீன்கூட்டம்
பெண்ணினுண் மனம்வற்றினல், என் அன்பனே
பேதையந்த மீன்போலடா, மீனுக் கொப்பாங்
கோதைக்கிடற் செய்யாதேடா. (31)

ஆட்டமும் பாட்டமு மழகான சிங்காரிப்பும்
வாட்டமாய் வல்லியற்கு, என் அன்பனே
வாய்த்தல் பத்தாவாலடா, வல்லியுந்தன்
தாய்க்கிபின் தாரமடா. (32)

எல்லாரை யும்விட்டு இதமா யுனையடுத்த
நல்லாளுக் கிடற்செய்பவன், என் அன்பனே
நாணங் குலைவானடா, நானிலத்தோர்
வீணனென் றுரைப்பாரடா. (33)

நீயாரோ அவள்யாரோ நிட்சயித்துத் தாலிகட்ட
தாயாரின் வீட்டைவிட்டு. என் அன்பனே
தலைவனென்று வந்தாளடா, வந்தவளை
மலைக்கவே செய்யாதேடா. (34)

பிறந்த வீட்டிலவட்கு பிறியசுகமு மில்லை
உரமாக உன்னிடம் வந்தும், என் அன்பனே
உருமவள் சுகமேதடா, உற்றஅவள்
தருமச் செயல்கேளடா. (35)

வந்துசுகந்தந்து வண்மையுன் குடும்பத்தை
அந்தமாய் சொந்தமென்று, என் அன்பனே
ஆதரிக்கும் அரிவையடா, அந்தநற்
காதலியை வெருக்காதேடா. (36)

உன்சொத் தவள்சொத்தா யோசித்துப் பாதுகாத்து
நன்றுந்தன் இனத்தார்கள்முன், என் அன்பனே
நல்மதிப் பீந்தாளடா,ஈந்தவளின்
தொல்லைஇனுங் கேட்பாயடா. (37)

உந்தன் தாயர்தந்தை உற்றஅக்காள் தங்கை
சொந்தமாய் பாராட்டியே, என் அன்பனே
சோம்பாமல் நடந்தாளடா, நடப்பவளை
வேம்பாக எண்ணுதடா. (38)

அவர்க ளநுவலிட்டால் அதைதட்டாமல் உகப்பாய்
நவமாயுன் மனதார்ந்திட, என் அன்பனே
நற்பணிகள் செய்தாளடா, செய்துபின்
தர்க்கிக்கா தவள் கேளடா. (39)

அல்லல் பகலெல்லா மயர்ந்தப்போ நீயழைத்தால்
வல்லஉன் னுவல்தீர, என் அன்பனே
வல்லியுடன் பட்டாளடா, அந்த
மெல்லிகைத் துயர்கேளடா. (40)

ஆசை யுனக்களித்து அதினுற்பிள் ளைதரித்து
நேசத்தோ டுன்பிள்ளையை, என் அன்பனே
நேர்மையுடன் சுமந்தாளடா, சுமந்துபல
சீர்மைபல திழந்தாளடா. (41)

பத்துமாதம் சுமந்துப் பற்பல வருத்தமாய்
முத்துப்போலுன் பிள்ளையை, என் அன்பனே
முறைபோல வளர்த்தாளடா, வளர்த்துனது
குறைகூரா துற்றாளடா. (42)

அந்தஉன் பாலகனை அல்பகல்பாடுபட்டு
சிந்தையி லிகழாதுந்தன், என் அன்பனே
செல்வர்களை வளர்த்தாளடா, வளர்த்துனது
தொல்லைபல தேற்றாளடா. (43)

அரிவைக் கிடற்செய்யா ஆதரித்துநீவந்தால்
மரியாதை இருலோகிலும், என் அன்பனே
மனதாரப் பெருவாயடா, உன்னையுன்
இனத்தாரும் புகழ்வாரடா. (44)

இக்காலத் தில்உதித்த இடர்செய்யு மாண்கள் சிலர்
ஏக்காளத் தால்மனையை என், அன்பனே
ஏசத்தொடுத்தாரடா, சீதனப்
பாசத்தி னூற்கேளடா. (45)

நன்றியை யுணராத நாதாரா மாண்கள்சிலர்
என்ன தந்தாய் சீதனமென்று, என் அன்பனே
இடர் செய்யத் தொடுத்தாரடா, தொடுத்துபலப்
படற்பேச மிகுத்தாரடா. (46)

காசைக் கொங்கைக்காரி கருதிஎன்னத் தருவாள்
மீசைக்காரன் என்னதின்பான், என் அன்பனே
மேன்மையாண் நாடானடா, நாடாதன்
ஆன்மாவிற் கருள்வானடா. (47)

ஆண்டவன் றனக்கிய லதைப்போது மாக்கிகொள்ள
நீண்டதோர் நாட்டம் வைப்போன், என் அன்பனே
நேர்மையாண் அவன்தானடா, நேரிழையை
சீர்கெடவே ஏசானடா. (48)

பின்னுமிதை யுரைக்க பெருகுமிந்த சிறுநூல்
என்றுஇதை சொன்னமட்டில், என் அன்பனே
இயல்புநல மெடுத்தோரடா, இருலோகில்
நயம்பலதை ஏற்பாரடா. (49)

ஆசையா லாண்பெண்கள் அடவாம் நடப்பெடுத்து
ஜாகையிதிற் சென்றோருடன், ஆண்டவன்
சருகாது சேர்ப்பானடா, என்றஹ்ஸன்
தருமச் சொல் ஆமீனடா. (50)

தருமஞ்செய்வார் நலமும் தட்டுவார் தீங்குகளும்
பெருமையின் பழிப்புகளும், பாகமைந்தில்
பிரித்துரைக்கக் கேட்பீர்களே. (51)

ஆகபாகம் 4-ல் அத்யாய8-க்குகூடிய பாடல்கள் 425

சர்வமத சமரஸ போதினி நான்காம்பாகம் கடவுள்
கிருபையால் முற்றுப் பெற்றது.

இ ஃ து

மதபேதகமில்லா பொதுநல நீதிகளைக்கூறும்

# சர்வமத சமரஸ போதினி.

## ஐந்தாம் பாகம்.

### காப்பு – விருத்தம்.

சர்வமத சமரஸநூல் சாற்றுமைந்தாம் பாகம்
தர்மத்தை யுணர்ந்திடலுந் தகமையிலாப் பெருமையதின்
கெர்வத்தை யகற்றிமனு கீர்த்தியுடன் வாழ்வதற்கு
மர்மங்கள் பலதுரைக்க மன்னவனே நீகாப்பு. (1)

### அவையடக்கம்.

மேஞ்ஞானத் தங்கமெட்டு.

நல்லார்க்கு சொர்க்கமும் பொல்லார்க்கு நரகமும்
சல்லாப மாயமைத்தாள், ஆண்டவனை
சருகாதல் பகல்போற்றியே, சங்கையுள
திருநபி தமைவாழ்த்தியே. (2)

கடவு ளேர்ககாசெயல் காசினியில் மானிடர்கள்
நடப்புக ளேற்பதினால், நன்குணர
நவின்றதால் அஹ்ஸனிதே, என்அன்பரே
செவியாரக் கேட்பீர்களே. (3)

தருமஞ் செய்வார்நலமும் தட்டுவார் கெடும்பதும்
பெருமைசெய் வாரிழிவும், என் அன்பரே
பின்பவர் தொல்லைகளே, பிரித்துரைக்க
இன்புற்றுக் கேள்பீர்களே. (4)

ஆக முதல்பாகம் மருபாகம் மூன்றும்பாகம் நான்காம்பாகம் சேர்ந்து இம்மட்டிற்கூடிய பாடல்கள் 429.

9-வது அத்தியாயம்

## தானம் செய்வதின் சிறப்பு.

மெஞ்ஞானத் தங்கமேட்டு.

பிறக்கையில் இறக்கையில் இல்லாதிடை நடுவிற்
சிறக்கக் கிடைத்தப் பொருளில், தருமத்தை
சீமான்கள் செய்வீர்களே. (1)

பசித்த ஏழைப் பலர்க்கு பங்கிட உம்வசத்தில்
நசியாமற் செல்வம் பொருள், நானிலத்தில்
நாதனீந்த தறிவீர்களே. (2)

நாதன் கருத்துணரா நல்தானத் தைவிரும்பா
பூதம்போல் காத்திருந்தோர், வெருங்கையாய்
போனதுற் றுணர்வீர்களே. (3)

காணி பூமிதோட்டங் கட்டடத்தி னுசையினல்
வீணிலறஞ் செய்யாபலர் போகயிலே
வெருங்கையாய் போனார்களே. (4)

நவமா யிருப்பதினல் நலிந்தோர்தே டிவருவார்
அவரைப்போ லுத்த னிருந்தால், அவனிடம்
எவரும்வர மாட்டார்களே. (5)

காய்க்கு மரந்தனிலே களித்துபல பக்ஷிகங்கும்
காய்க்காத மொட்டைமரத்தில், காக்கையுங்
களித்திருக்கக் காணுர்களே. (6)

நாகைப் பழமொப்பாம் நல்தான வான்சொத்து
ஈகையில்லா ஈனன்சொத்து, எட்டிபழ
மிதற்கொப்பென் றறிவீர்களே. (7)

எட்டிப் பழுத்தென்ன ஈகையில்லா னிருந்தென்ன
குட்டிச் சுவற் றுக்கொப்பாம், என்றெவரும்
கூர்ந்திதை யுணர்வீர்களே. (8)

நாய்மடி யிற்பாலே நானுழிகறந்தாலும்
வாய்க்காது சுவைஎவர்க்கும், அதுபோல
வழங்கான்சொத் தறிவீர்களே. (9)

நல்வழிசெலவிடா நாதார் லோபியிடம்
கல்நெஞ் சின்கா லன்வந்தால், காக்காசுங்
கைக்குதவா தறிவீர்களே. (10)

அறஞ்செய்வா ரைசுவன மாவலாய் தேடுதின்னும்
பரமனுத்த லோபிகளே, பாழ்நரகின்
பாதாளந் தேடுகிறதே. (11)

ஆதீ குணமெடுக்க அவன்நீதங் கள்ஜொலிக்க
ஜாதிமனு வாயாதமும், ஜகமிசை
சங்கையாய் உதித்தார்களே. (12)

பிறந்தது யாமனுவாய் பிறர்மே லிறக்கமாய்
சிரத்தைத் தவிர்ப்ப தற்காய், எனதன்பரே
ஜெனித்ததென் றறிவீர்களே. (13)

பசித்த ஏழைக்குதவாப் பதுக்கும்லுத் தர்மிகவாப்
புசித்தேப்பம் விட்டலேவோர், எனதன்பரே
பூமீதில் மிகுத் தார்களே. (14)

பக்ஷிவிலங்கினம் பல்தொடு எறும்பினம்
கக்ஷியாய் இரைதேடிபோய், தின்பதைக்
காண்கிலேயோ லுத்தர்களே. (15)

நான்கு விதகுணத்தார் நானிலத்தி லுண்டுமென
ஓங்குமறை தந்தநபீ, என்அன்பரே
உரைத்ததைக் கேட்பீர்களே. (16)

உண்ணுக் கொடுக்காத ஊதாரி லுத்தகுணம்
திண்ணுப் பதுக்கிவைத்தல், என்அன்பரே
திரபூத குணமாகுமே. (17)

ஆண்டவன் தந்திருக்க அதிஏழைப் பசித்திருக்க
பூண்டதன் வயர்நிறப்பல், என்அன்பரே
பொல்லாத நாய்குணமே. (18)

தானுண்டும் பிறருக்குத் தகுமாக யூட்டிவைக்க
மானுடரைத் தேடிகொடல், என் அன்பரே
மஹான் மனுகுணமதே. (19)

உண்ணுமற் பிறருக்கு உருக்கமா யூட்டிவைக்கும்
அண்ணுவி குணமானது, என் அன்பரே
ஆதிகுண மென்றார்களே. (20)

ஆதீ குணமெடுத்தோர் அவரெண் பதிசுவனில்
நீதியாய் நாடும் வாயலிற், புகுவரென்று
நேர்மைநபீ சொன்னார்களே. (21)

இந்தபல நலமுற்று ஏற்றபொது வேலையுற்று
சிந்தை மகிழ்ந்து செய்யும், சீமான்கள்
ஜெகத்திற்சில ருற்றார்களே. (22)

அயலார்கள் விர்த்திக்க அதிஏழை கள்படிக்க
மயங்காமல் லக்ஷகணக்காய், செலவிட்டு
மனது மகிழ்ந் துள்ளார்களே. (23)

மாண்டாலுந் தானவான் மாநிலத் திற்பெயர்
தீண்டா மணிவிளக்காய், எப்பவுந்
திட்டமாய் விளங்கிடுமே. (24)

ஆண்டவ னளித்திருக்க அறமிடா லோபிசெத்தால்
பூண்டப் பெயர் மண்ணுடன், என் அன்பனே
போமண்ணாய் விளங்காதடா. (25)

தருமத்தை யுகந்திடார் தானவான் பெயர்களை
அருமையாய் கேட்டாவது, அறஞ்செய்ய
அன்பொடு கேட்பாரடா. (26)

அடவாய் கொடிநாட்டும் ஹாஜீ பாக்ஷாவென்று
திடனாய்திக் கெட்டில்பெயர், என் அன்பனே
தேர்ந்ததவர் தானமடா. (27)

பாக்தீன்ஹாஜீ பாக்ஷாசா என்றெங்கும்
யோக்ய.சிலாக்யபெயர், என் அன்பனே
உயர்வதவர் தானமடா. (28)

அப்துல் ஹக்கீமென்று ஐரோப்பு மிந்தியாவும்
மெப்பாய்பேர் விளங்கலவர், என் அன்பனே
மிகுதான மாகுமடா. (29)

ஜமாலியா என்னுமொரு சங்கை மஹான்பெயர்
கமாலாய் விளங்கலவர், என் அன்பனே
கருதிச்செய் தானமடா. (30)

உமரண் ஜலால்கரீம் உற்றப்பெய ருலகெங்கும்
கமர்போ லிலங்கலவர், என் அன்பனே
களித்துச்செய் தானமடா. (31)

ஹாஜீ ஹனீபென்போர் அண்டின ஏழைகட்கு
யோசிக்கா தவர்களசெய்த, என் அன்பனே
உயர்தான மாகுமடா. (32)

சர்ஹாஜீ இஸ்மாயீல் சேட்டென்று சஙகையாய்
நற்பெய ரோங்கலவர், என் அன்பனே
நல்தான மாகுமடா. (33)

ஆர்இ மம்மத்காசீ மவருமவர் மகனர்பேர்
ஏர்க்கையாய் விளங்குவது, என் அன்பனே
ஏற்றநல் தானமடா. (34)

சிதம்பரத் துக்குஅண்ண மலைநக ரென்றுபெயர்
இதமாக மாற்றலவர், என் அன்பனே
ஏற்றநல் தானமடா. (35)

உமர்ஆபாத் என்றுஒரு ஊர்பெயர் விளங்கியே
விமரிசை யாயோங்கிடல், என் அன்பனே
விரும்பிச்செய் தானமடா. (36)

இன்னுமிதுபோல ஏற்றபுண்யம் அள்ள
நன்றுதானஞ் செய்குவோர், என் அன்பனே
நாட்டில் இருப்பார்களே. (37)

எனக்குத் தெரிந்தமட்டி லெங்நாட்டிற் றெங்நாட்டில்
மனதார்ந்த மஹான்களின், மகிமைபெயர்
மருமைமட் டழியாதடா. (38)

இந்தமஹான்கள் ஏற்றபள்ளி இஸ்கூல்
அந்தமாய் நன்கொடைகள, என் அன்பனே
ஆண்டவனுக் கமைத்ததடா. (39)

அந்த மஹான்களா லமைந்ததாய் பின்புலகோர்
சிந்தைமகிழ்ந் தவர்கள்பெயர், என் அன்பனே
செப்பியே புகழ்வாரடா. (40)

போதத் தனமுடையான் போகயி லவன்பொருளில்
காதற்ற ஊசியுங்காணுன். கலக்கமாய்
கனதனம் விடல் கேளடா. (41)

எலிவளைத் தோண்டியவன் எலிகரிக் கானதென்றும்
சலியாமல் சாப்பாட்டுக்கு, தவசமென
சந்தோஷித் தல்போலடா. (42)

பலகாலம் சேர்த்தஎலி பாதையுண ராவேடன்
இலகுவாகப் பற்றுங்கதைபோல் ஈனர்சொத்
தீனருண்டு களிப்பாரடா. (43)

உண்ணுக் கொடுக்காத உலோபி உயிர்துறக்க
எண்ணுது எண்ணமா ஏங்கி, என் அன்பனே
எழுமைப் போல் சாவானடா. (44)

தன்னைத் தானேபார்த்து தலேமே லடித்தழுது
என்னமதி கெட்டேனென்று, லுத்தன் சவம்
ஏங்கித் தயங்குமடா. (45)

ஏங்கித் தியங்காமல் ஏற்றமூச் சிருக்கையிமேல
பாங்குபெற நாடும்சீமான், மருமையிலே
பண்புபெற கேள்பாரடா. (46)

## வேறு

### தருமக்காதல்—என்ற மெட்டு.

தருமக் காதலை கேளுங்கள், தனமுடையீர்
தருமப் புண்யத்தை யள்ளுங்கள். (தருமக்)

(47) தருமஞ்செய் வோர்கட்கு தனியவ னுகப்பாளி
தருமஞ்செய் வோர்கட்கு தரையெங்குங் கூட்டாளி
தருமஞ்செய் வோர்களே தயங்குவோர்க் குபகாரி
தருமஞ்செய் வோர்களால் கல்வியும் மரியாதி
தருமஞ்செய் வோர்பெயர் மாண்டாலும் பிரக்யாதி
தருமஞ்செய் வோர்களால் ஏழைகள் சுகவாழி
தருமஞ்செய் வோர்கட்கு சொர்க்கமும் பங்காளி
கருமிகட் கெந்நாளும் கடும்நர கெதிராளி. (தருமக்)

(48) கருமிப் பயல்கள் சொத்தைக் கட்டிக் காப்பதேனோ
கருமிப் பயல்கள்மெத்தக் காய்ப்பில்லா மரந்தானோ
கருமிப் பயல்நெஞ்ஜங் கல்லு மிரும்புதானோ
கருமிப் பயல்பிறப்பு கனபூதம் பேய்தானோ
கருமிகள் சொத்துக்கு உடையவ னெவன்தானோ
கருமிகள் செலவிட்டா லுடையவ னுதைப்பானோ
கருமிப் பயல்செத்தால் சுடுகாடு செல்லானோ
கருமித் தனத்தைவிட்டும் பெருமை சுவனம்பெற. (தருமக்)

(49) கருமிகள் சொத்துக்கு எவரெனில் பங்காளி
கருமிகள் சொத்துக்குக் களவாணிபங்காளி
கருமிகள் சொத்துக்கு தண்ணீரும் பங்காளி
கருமிகள் சொத்துக்கு கங்கியும் பங்காளி
கருமிகள் சொத்துக்குக கோர்ட்டாரும் பங்காளி
கருமிகள் சொத்துக்குக் கணிகையர் பங்காளி
கருமிகள் சொத்துக்கு குடியர்கள் பங்காளி
தருமஞ் செய்வோர்கட்கு சொர்க்கமே கூட்டாளி. (தருமக்)

(50) கருமிப் பயல்களுக்கு கல்ரத்ன மிருந்தென்ன
கருமிப் பயல்களுக்கு காடும்வீ டிருந்தென்ன
கருமிப் பயல்ஜடலம் பெருப்பமாய் பெருத்தென்ன
கருமிப் பயல்கையில் கணையாழி யணிந்தென்ன
கருமிப் பயல்காதில் கடுக்கன்போட் டிருந்தென்ன
கருமிப் பயல்முகத்தில் கனவழ கிருந்தென்ன
கருமிப் பயலைகாரில் கொத்து மரவமுங்தேள்
கருமித் தனத்தைவிட்டுப் பெருமை சுவனம்பெற (தருமக்)

வே று

## மெஞ்ஞான தங்கமெட்டு.

உம்மிட மிருப்பது செலவாகு மென்றதை
நம்மிடமனுப்ப இருப்பாய், இருக்குமென
நாத னுரைத் தானடா. (51)

மணமான கீர்த்திஇல்லா மருமைக்கி இருப்பில்லா
பணத்தைப் பதுக்கிவைக்கும், லுத்தனே
பண்புபெற கேட்பாயடா. (52)

பட்டாங்கா யுலகேழைப் பட்டமாளற் போதாமல்
எட்டாவ தெங்கேஎன்று, தேடுவது
இதுமனுபே ராசையடா. (53)

நளச்சக்ர வர்த்திஎனும் நம்றா தாசனவன்
களஞ்சியம் போதுமென்கா, காலமும்
கஷ்டம்பல தெடுத்தானடா. (54)

பெருத்த முதலைப்பெற்ற பிர்அவ்னும் பொக்கிஷத்தை
வெருத்த தில்லைப் போதுமென்று, வீணாசை
விரும்பிபொருள் சேர்த்தானடா. (55)

கணக்கற்ற திரவியங் காறான் கருமிசேர்த்து
பணம்போது மென்றுரைக்கா, தானமிடா
பதுக்கிபதிங் தொழிந்தானடா. (56)

மண்கண்ணில் விழுமளவும் மனிதன் பேராசையது
புண்படவே தூண்டுவது, உலகமெனும்
பூவையவள் மருட்டலடா. (57)

அவள்மருட் டிற்பட்டு அல்பகல் பாடுபட்டு
நவமாசை வைத்தமிகுபேர். பொருள்விட்டு
நாட்டிலில்லா சென்ருராடா. (58)

சென்றவர் போல்நமக்குஞ் செல்லஒரு காலம்வ நம்
என்றுஇதை உற்றுணர்ந்தே, லுத்தனே
ஏற்ற அறஞ் செய்வாயடா. (59)

14978

காத லுடன்கருமி கண்யமாய் சேர்த்ததுவைப்
பூதம்போல் காத்திருந்தோன், உயிர்துறக்க
போர்கடைவைத் தகன்றானடா. (60)

செத்தால் திடீலென்று சேர்ந்தபங் காளர்வந்து
எத்தாகப் பூட்டியே சண்டை, லுத்தனே
எடுப்பதைக் கேட்பாயடா. (61)

எனக்கு இருபாக மின்னுனுக் கொருபாகம்
உனக்கரை பாகமென்று, லுத்தனே
உறமாகப் பேசுவாரடா. (62)

ஜேஷ்டப் புதல்வன்யான் சேகரித்த சொத்திதென்று
கோஷ்டம் பலதுரைத்து, லுத்தனே
கும்மாளங் கொட்டுவாரடா. (63)

சவத்தை முன்னெடுக்க சாற்றசிலர் பங்கிடுமுன்
எவரெடுப்பார் பார்ப்போ மென்று, லுத்தனே
எக்காள மிடுவாரடா. (64)

பாகஞ் சரியாகப் பத்துநா ளானும்
போகவிடேன் சவத்தைஎன்று, லுத்தனே
போராட்டஞ் செய்வாரடா. (65)

சவத்துக்கு வந்தபலர் சஞ்சலித்துப் பேசிடுவர்
அவமானம் சவமெடுக்கா, லுத்தனின்
அவகீர்த்தி என்பாரடா. (66)

ஆவி இருக்கயிலே அவன்பாகஞ் செய்திருந்தால்
பாவிசவம் நிர்க்காதென்று, லுத்தனே
பலரேசத் தொடுப்பாரடா. (67)

இரண்டொன் றரையாக எனம்போல பாகமிட்டு
சிறப்பாக சவமெடுக்க, லுத்தனே
சேர்ந்தபலர் சொல்வாரடா. (68)

'பாக மரையுமொன்றாய்ப் பற்றும்பங் காளர்கள்
ஏகசெல விட்டா லொப்போம், லுத்தனே
இலேசிலெடு மென்பாரடா. (69)

அதிஜம்பம் டம்பமேன் அடிதடியில் விட்டவனின்
சதிசவ மெடுக்க லேசாய், யோசித்து
செலவிடு மென்பாரடா. (70)

இப்படி தர்க்கசவ மிரண்டுநாள் கிடந்தெடுக்க
தப்பாது கண்டுரைத்தேன், அஹ்ஸனும்
தனவந்த ருணர்வாரடா. (71)

செத்தாற் பிரரேசா சீமான் பயணத்துமுன்
முத்தான மார்க்கப்படி, என் அன்பனே
முறைபோல் பாகிப்பாரடா. (72)

பாகஞ்செய் சீமான்கள் பயணத்திற் றனக்காக
ஏகனிட மிருப்பாக்கிட, என் அன்பனே
ஏற்றஅறஞ் செய்வாரடா. (73)

ஆகையால் சீமான்கள் அன்பும் பிரியத்துடன்
போகையில் கூடவரும், தானத்தின்
புண்யத்தை யள்வாரடா. (74)

புண்ய தானமள்ளிப் புகழ்கீர்த்தி இருலோகில்
கண்யபேர் விளங்கச் சென்றோர், உடன் நம்மை
கத்தன் சேர்க்க ஆமீனடா. (75)

ஆக அத்தியாயங்கள் 9-க்கு கூடிய பாடல்கள் 504

## 10-வது அத்யாயம்.

# பெருமையின் தீங்கு.

மெஞ்ஞானத் தங்கமேட்டு

பெருமை யுள்ளான்வெற்றிப் பெறமாட்டான் பின்னுமவன்
சிருமையி லாழ்வானென்று, செம்மல்நபி
செப்பினர் கேள்பீர்களே. (1)

கடுகள வுப்பெருமைக் கருதின வன்னரகில்
முடுகிமூழ் குவானென்று, என் அன்பரே
முஹம்மதர் சொன்னார்களே. (2)

பெருமைக்கி செய்செயலும் பேருக்குச் செலவிடலும்
அருமையா ஏர்க்காதென்று, என் அன்பரே
அஹ்மதர் உரைத்தார்களே. (3)

பெருமை யுளான்தாழ்வும் சிருமையு ளான்வாழ்வும்
அருமையாய் நபிசொன்னதை, என் அன்பரே
அருளவே கேட்பீர்களே. (4)

தலைதூக்கி நிமிர்ந்தோனின் தலையைத் தாழ்த்தியவன்
மலைத்திட மலக்கொத்தரை, என் அன்பரே
மன்னோன் அனுப்பி பின்னுமே. (5)

தஞ்சமா யொருவனுந் தாழ்த்துந் தலையுயர்த்த
அஞ்சலில்லா மலக்கொத்தரை, என் அன்பரே
அனுப்புவா னென்றார்களே. (6)

ஆண்டவன்நீதமது ஆழ்ந்தவ னையுயர்த்தல்
பூண்டப் பெருமைக்காரனை, என் அன்பரே
பூமீதில் தாழ்த்துவதே. (7)

நதிநீரில் தலைதாழ்த்தி நலிந்தக் கோரைநிமிரும்
அதிஉயர் நிமிர்ந்தபனை, அடியோட
ஆற்றில்போ மறிவீர்களே. (8)

நலமாக வாழ்ந்தகுடி நலிந்து மெலிந்ததுவும்
கலக்கமா யொழிந்ததுவும், என் அன்பரே
கருதுமவாள் பெருமைகளே. (9)

இந்த வகையுணரா இக்காலத்தில் மிகுந்த
நிந்தனைப் பெருமைதட்ட, என் அன்பரே
நிகழ்த்துவதைக் கேட்பீர்களே. (10)

உப்பின் குணமுடையார் உயர்தலை தாழ்த்திடுவார்
உப்புசப்பில் லாமனத்தார், என் அன்பனே
உயர்த்திதலை நிமிர்வார்களே. (11)

எப்பிண மானாலு மேற்றுஉப்புப் புதையல்
ஒப்பிதன் இனமாக்கிடல், பெருமையில்லா
உப்பின்குண மறிவீர்களே. (12)

ஒருபானை தண்ணீரில் ஒருபானை உப்பைகொட்ட
பெருகாம லமரும் உப்பின், குணமெடுத்துப்
பெருமை செய்யா திருப்பீர்களே. (13)

கணக்கற்ற செல்வங்கள் காசினியிற் பெற்றாலும்
இணக்கமுள உப்பின்குண, மெடுத்தென்றும்
இடற்பெருமைச் செய்யார்களே. (14)

எறும்பொன்று ஜடலத்தில் இருக்கிக் கடித்துவிட்டால்
சிறுமையாய் துடிப்போனுக்கு, பெருமையின்
குரும்புக ளேதுக்கடா. (15)

பசிதாகம் சூடுகுளிர் பயம்நோய் மரணமதின்
நசிந்தேழின் கவலையுள்ளான், என் அன்பனே
நானென்று நிமிராதெடா. (16)

திண்டால் நெடுஞ்சுவர் நிலையற்றால் குட்டிச்சுவர்
பிண்டாச்சோர் பொம்மைக்கிங்கு, என் அன்பனே
பேர்பெருமை ஏதுக்கடா. (17)

மூத்திர வழிவந்த முண்டப் பயலுனக்குப்
பாத்தீபப் பெருமைஏனோ, என் அன்பனே
பாதகப் பெருமை தட்டடா. (18)

காலையிலு மாலையிலுங் கையால் மலங்கழுகும்
வேலையிலே ஆழ்ந்தோனுக்கு, என் அன்பனே
வீண்பெருமை ஏதுக்கடா. (19)

நாற்ற மலமதனை நாளுஞ் சுமந்தலையும்
ஊற்ற ஜடலமெடுத்த, என் அன்பனே
உனக்கேது பெருமையடா. (20)

பிணியொன் றடுத்திடில் பிழைப்பேனோ என்னுந்திகில்
அணிவகுப் பாயாழ்பவன், உந்தனுக்கு
அகப்பெருமை ஏதுக்கடா. (21)

மூச்சொன் றடைபட்டால் மூண்டவெரிக் கோலமாய்
பேச்சிற் பிதற்றியுழல்வோன், உந்தனுக்கு
பெருமைகள் ஏதுக்கடா. (22)

பெருமையா லெத்தனையோ பிரபல்ய மாய்வாழ்ந்தோர்
சிருமையாய் ஜெகமிதிலே, என் அன்பனே
சீர்குலைந் துள்ளாரடா. (23)

கடனும் உடனும்பட்டு கண்யமாய் பெருமைக்கி
நடத்துங் கருமமெல்லாம், என் அன்பனே
நாணங் குலைக்குமடா, (24)

கையிலே உள்ளமட்டுங் கண்யத்தைக் கருதாமல்
சயிக்கினை யாய் முடித்தால், என் அன்பனே
சஞ்சல மணுகாதடா. (25)

சிருமையால் பெண்டுபிள்ளை சிக்குண்ட போதடுத்த
திருமணம்போ லொற்றதை, என் அன்பனே
திரமுன தாய்ந்து செய்யடா. (26)

கடவுள் கொடுத்திருந்தால் கலியாணங் காரியத்தில்
அடவாக என்றமட்டும், என் அன்பனே
அன்ன தானஞ் செய்யடா. (27)

இன்னும் பொது அலுவல் ஏழைக் குமர்முடித்தல்
நன்றிந்தக் கருமங்களில், என் அன்பனே
நலமாய் செலவு செய்யடா. (28)

புலியின் கூட்டைக்கண்ட பூனையவ்வா றிட்டதுபோல்
நலிந்தவர் தனவந்தர்போல், என் அன்பனே
நாடிசெயல் கூடாதடா. (29)

கலியாணம் ஸ்ரீமந்தம் காதுகுத்தல் மூக்குக் குத்தல்
சலியாசெய் சடங்குகட்கு, என் அன்பனே
ஜம்பத்தை நாடாதடா. (30)

ஜம்பம் டம்பஞ்செய்ய சருகாமல் கடன்பட்டு
கம்பம்போல் கோர்ட் டார்முன்னே, என் அன்பனே
கைக்கட்டி நில்லாதெடா. (31)

வெரும்வீடா யிருந்தாலும் வேலூர் அதிகாரம்
மருங்காக செய்ய கருமம், என் அன்பனே
மதித்துச் சிலர் கோளடா. (32)

தென்னல் கன்னல் தோட்டம் திறபயிர் பலநாட்டம்
பின்னவருங் கணக்கெடுத்து, என் அன்பனே
பெருங்கடன் படல் கேளடா. (33)

வாசஞ் செய்யும்வீடும் வயல்தோட்ட முந்துரவும்
பாசமாய் ஈடுவைத்து, என் அன்பனே
பத்திர மெழுது வாரடா. (34)

வாங்கயிற் செய்நாட்டம் வைத்த தாகாநஷ்டம்
தாங்குங் கடன் தீர்ந்திடா, என் அன்பனே
தயங்கித் திகைப் பாயடா. (35)

தவணைப் படிகொடுக்காத் தயங்கயில் கொடுத்தவர்
கவனமாய் கடனைப்பற்றி, என் அன்பனே
கண்டித்துக் கேட்பாரடா. (36)

குண்டுமுன் சென்றாலுங் கொடுத்தோர்கள்முன் செல்லல்
பண்புடற் பதருமென்று, முன்னோர்கள்
பரிசோதித் துரைத்தாடா. (37)

கண்ட வுடனவரை கவலையோ மீன்வலையில்
திண்டாட்டப் படுவதுபோல், என் அன்பனே
திகைத்துள்ளம் பதைப்பாயடா. (38)

கொடுத்தோ ரெறிந்துமனங் கோர்ட்டுக்குள் போய்நுழைந்து
தொடுத்துன்மேல் தாவாச் செய்து, என் அன்பனே
தோதுப்போ விழுப்பாரடா. (39)

தீர்ப்பு அவர்பெற்று திறமாய் வாரண்டெடுத்து
சார்பா யுனைபிடிகக, என் அன்பனே
சஞ்சலப் படுவாயடா. (40)

சஞ்சலப் படுவதேன் ஜனஙகள்முன் நாணுவதேன்
அஞ்சாமற் முன்செய்தஉன், என் அன்பனே
ஆகாப் பெருமையடா. (41)

பார்த்தப் பலர்சிறிக்கப் பாக்கிக் காரர்நெருக்க
சேர்த்தப் பொருளழிக்க, என் அன்பனே
செய்ததுன் பெருமையடா. (42)

ஒன்று இரண்டுநா ளுபசாரம் சந்தோஷம்
வென்றிபின் கடன்றுயரில், என் அன்பனே
விசனித்த லேதுக்கடா. (43)

சிறுமைப் பலநெடுத்து சேர்த்ததை யொத்து வைத்து
பெருமைக்கு செய்காரியம், என் அன்பனே
பேயனைப்போல் விட்டதடா. (44)

இதுபோல இவ்வுலகில் இடராம் பெருமையினல்
பதுமையாம் பாக்யமற்று, பலபேர்கள்
பரதவித் தொழிந்தாரடா. (45)

ருவணன் கெர்வத்தால் ருமர்தம் பாணத்தால்
ஜீவனுந் துள்ளத்துடிக்க, என் அன்பனே
சிதைந்தழிந் தொழிந்தானடா. (46)

துரியோதரன் என்னுந் துட்டன் பெருமையினல்
பெரியோரை புண்படுத்தி, என் அன்பனே
பிதற்றி யொழிந்தானடா. (47)

இரணியன் என்பவன் யானேகடவு ளென்று
சிறக்கச்செய் பெருமையினல் கிழிபட்டுச்
செத்தழிந் தொழிந்தானடா. (48)

டம்பாச்சாரியவன் டம்பம் பெருமையினுல்
வம்பாம்வீண் செலவுசெய்து, என் அன்பனே
வாதைபட் டொழிந்தானடா. (49)

இன்னும் பெருமையினு லெத்தனேயோ பேர்மாண்டார்
பின்னுமதைச் சொல்ல வென்ருல், என் அன்பனே
பெருகுமிச் சிறுநூலடா. (50)

மொத்தசொல் பெருமையுளான் மோக்ஷகதி யடையான்
முத்தாம் நபீமொழிபோல், என் அன்பனே
முண்டெரிநார் புகுவானடா. (51)

ஆதிநம் யாவரையு மாகாப் பெருமைவிட்டு
நீதியாய் நடந்தோருடன், என் அன்பனே
நேர்படுத்த ஆமீனடா. (52)

விபசாரத் தின்பழிப்பும் விரும்பி யொற்றுவாழ் சிறப்பும்
உபதேசம் பற்பலதை, பாகமாரில்
உகப்புடன் காண்பீர்களே. (53)

ஆக பாகமைந்தில் அத்தியாயங்கள் 10-க்கு கூடி பாடல்கள் 557
சர்வமத சமரசபோதினி 5-ம் பாகம் கடவுள் கிருபையால்
முற்றுப்பெற்றது

இஃது.

மதபேதக மில்லா பொதுநல நீதிகளைக்கூறும்

# சர்வமத சமரஸ போதினி.

## ஆறும் பாகம்.

### காப்பு விருத்தம்.

சர்வமத சமரஸநூல் சாற்றும் ஆறும்பாகம்
கர்மதன விபசாரக் கடுசுகளும் ஒற்றுமையின்
பற்பலநன் முறைபலதை பண்பா யறிந்துணற
நற்போத னைக்கூற நாயகனே நீகாப்பு. (1)

### அவையடக்கம்.

### மெஞ்ஞானத் தங்கமேட்டு.

வான்புவி படைத்தாளும் வல்லான் றனைபோற்றி
மேன்மை நபியை வாழ்த்தி, எனதன்பரே
மிக்கஇச் சிறுநூலிலே. (2)

இக்காலத் திற்கொடு மிடர்விப சாரத்தால்
துக்கத்தி லாழ்ந்துபலர், எனதன்பரே
துன்பத்தி லாழ்ந்தார்களே. (3)

இன்னு மொற்றுமையில்லா திடர்கள் பலவிதத்தால்
துன்பத்தி லாழ்ந்து என்றும், எனதன்பரே
துயரத்தி லாழ்ந்தார்களே. (4)

ஆழ்ந்தப் பலர்துயரை அஹ்ஸன்கண் டுபதேசம்
பாழ்புவியி லுள்ளமட்டும், எனதன்பரே
பண்புப் பெறநாடியே. (5)

விபசாரத் தீங்குகளும் விரும்பியொற்று வாழ்மருங்கும்
உபசாரமென்று எண்ணு, எனதன்பரே
உரைப்பதைக் கேட்பீர்களே. (6)

ஆக 1, 2, 3, 4, 5 பாகங்களில் இம்மட்டில் கூடிய பாடல்கள் 563.

## 11-வது அத்யாயம்.

# விபசாரத்தின் பழிப்பு.

மெஞ்ஞானத் தங்கமெட்டு

விபசாரத் தோஷத்தால் விளைதீங் குரைப்பதினுல்
உபசார மென்று எண்ணு, எனதன்பரே
உற்றிதைக் கேட்பீர்களே. (1)

ஆணுக்குப் பெண்ணமைத்து, ஆசீர் வதிப்பதற்கு
காணும்படி பலர்கூடியே, எனதன்பரே
கலியாணம் முடித்தார்களே. (2)

ஆசீர் வாதமென்ருல் ஆமணவன் மணமாதும்
நேசித்து வாழ்ந்திடவே, எனதன்பரே
நெடியோனைக் கேட்பதுவே. (3)

மாப்பிள்ளை மணமாது மனதார்ந்து நன்னடக்கை.
மூப்பிய ராகுமட்டும், எனதன்பரே
ஒற்றிருக்க வாழ்த்தினதே. (4)

வாழ்த்த லிதைமறந்து வம்பான விபசாரம்
பாழ்புவி யிற்செய்பவர்கள், எனதன்பரே
பரதவிப்பி லாழ்ந்தார்களே. (5)

விபசாரம் செய்தபலர் வீடுகள் பாழாகி
அபசார மாயழிந்ததை, எனதன்பரே
அனந்தம்பேர் சொல்வார்களே. (6)

அவனெழிந்தா னிவனெழிந்தா னகாவிப சாரத்தால்
நவமான வாழ்க் கைஎல்லாம், எனதன்பரே
நாசமாயிற் றென்றூர்களே. (7)

வாயலிற் கொடிநாட்டி வாழ்ந்தபல தனவான்கள்
மாயவிப சாரத்தினுல், எனதன்பரே
மதிப்பற்று ஒழிந்தார்களே. (8)

அரசாளும் பலமன்னர் ஆகாவிப சாரத்தால்
உறமாம் சிம்மாதனம் விட்டு, எனதன்பரே
ஒடுங்கியுரு குலைந்தார்களே. (9)

மண்டி மளிகையுள்ளோர் மாபவிப சாரத்தால்
திண்டிக்குந் திண்டாட்டமாய், எனதன்பரே
திகையுண்டு மடிந்தார்களே. (10)

கருமி குணமெடுத்து காசைவேசிக் களித்து
தருமவள் சொந்த புதையல், தாங்கினவன்
தடபுடல் காண்பீர்களே. (11)

பொன்னும் பொருளைபெற்று புகழ்கீர்த்தி யைத் துலைத்து
பன்னும் பரத்திக் கொடுத்த, சரக்குகளைப்
பகரவே கேட்பாயடா. (12)

தாசிக்குக் காசளித்து தையலவள் கால்பிடித்து
வேசிவெள்ளைப் பலதும் பெற்ற, வீணர்கள்
விளையாடும் வகைகாணடா. (13)

மூத்திர மடைபட்டு மூச்சுக்கோர் சப்தம்விட்டு
தோத்திடு மொரு சொட்டுநீர், இறக்கிட
துள்ளிவிளை யாடுவானடா. (14)

சிறுநீ ரொடுரத்தம் சேர்ந்துக் கசியும் நித்தம்
பெரும்எக்கத் துடனே சப்தம், போட்டழுதும்
பிரியாநீர் அடைக்குமடா. (15)

நீரடைப்பும் நெஞ்சடைப்பும் நேரும்பல கல்லெடுப்பும்
தோரணையாய் வந்துவிளையும், விபசாரத்
தொல்லைகட்டித் தோன்றுமடா. (16)

கட்டியும் புண்ணுமாகும் காரம்பூரந் தின்னவரும்
மட்டிசெய் விபசாரத்தால், என் அன்பனே
மாநிலமே பழிக்குமடா. (17)

தாசிக்குக் காசளித்து தான்கிரையம் பெற்றவட்டை
கூசாக்குத் தரையாப்பினல், என் அன்பனே
குதித்துத் துடிப்பானடா. (18)

புண்ணிலே ஈக்கள்மொய்க்க புழுகறிப்பாற் றுள்ளிவிழ
எண்ணி எண்ணி ஏங்கியழ. என் அன்பனே
இகத்தார் நகைப்பாரடா. (19)

கையிலே வேப்பிலையுங் காரம்பூரம் வீரமுண்டும்
ஐகோ குய்யோ சப்தமாய் விபசாரம்
அயர்ந்தழச் செய்யுமடா (20)

கட்டியும் புண்ணருக்க கத்திரியுங் கத்திசலாக்
அட்டியில்லா டாக்டர் தந்து, என் அன்பனே
அருக்கத் தொடுப்பாரடா. (21)

அருத்த ரணங்காய அதில்கார வத்திவைக்க
நெருப்பள்ளிக் கொட்டி யதுபோல், என் அன்பனே
நெடுந்துய் ரேற்பாயடா. (22)

மானம் மறைக்காமல் மாடாடுபோல் திறந்து
ஊனம்வழிந் தோட தாசி. என் அன்பனே
உனக்கீந்தப் பொருளீதடா. (23)

வேசிப்புண் பற்றிவிட்டால் வீட்டாளுனே வெறுப்பாள்
நேசித்த உரவா ரெல்லாம், என் அன்பனே
நிந்தனைகள் செய்வாரடா. (24)

நிந்தனைக் காளாயும் நீசெய்த விபசாரம்
வெந்தணலாய் கண்டுரவார், வைத்தியரை
வியர்த்தழைத்து வருவாரடா. (25)

பலபல பாதைபட பரிகாரிப் பார்த்துன்முகம்
நிலமிசையி லிவன்பயணம், என் அன்பனே
நெருங்கி விட்ட தென்பாரடா. (26)

இதுகேட்டு உன்கலக்க மெவரால் சொல்லமுடியும்
பதுங்கிசெய் பாதக மெண்ணி, உயிருடன்
பரதவிப்பி லாழ்வாயடா. (27)

தாசியை கூடிபெற்ற தன்மகள் தாயவள் போல்
வேசியாய் செய்பாவத்தில், பாவியே
வேணபங்கு முனக்குண்டடா. (28)

காலில் சதங்கைகட்டி கணிகையருல் பெற்றமகள்
வாலிபத்தில் ஆடக் கண்டோர், உன்பெயரை
வகுத்தேசத் தொடுப்பாரடா. (29)

உனக்குப் பிறந்தமகள் உலகிற்கொடும் விபசாரய்
மனதாாந்து செய்வ துனக்கு, பாவியே
மானக்கே டில்லையோடா. (30)

உலகத்தி லிம்மட்டு முற்றதுய ராவதுடன்
கலக்கமோ அவ்வுலகில், பாவியே
கணக்குரைக்க முடியாதடா. (31)

மாற்றுனைச் சேர்மாது மரித்தாலு முலகமிது
ஏர்க்கையா யுள்ளமட்டும், என்அன்பனே
இவள்பெயர் மறையாதடா. (32)

விபசாரி வம்சத்தை வீணுலகரெக்காலும்
அபசாரம் பேசுவ ரல்லால், என் அன்பனே
உபசாரம் பேசாரடா. (33)

அற்பசுக விபசார மரிவையாள் செய்ததது
கெற்பமுதல் மறுமைவரை, அவளுடைய
கெட்டபெயர் மறையாதடா. (34)

மாய்கை ஆசையிது மானிடரைக் கெடுக்குமிது
ஞாயந்தவிர் விபசாரத்தை, என் அன்பனே
சாரா தொழிப்பாயடா. (35)

எத்தனையோ பேருலகி லிடர்விப சாரத்தால்
பித்தராய் செத் தொழிந்தார், என் அன்பனே
பிரிக்கநூல் சிறியதடா. (36)

ஆண்டவன் நம்மைவிப சாரத்தை தட்டிவிட்டு
மாண்டநல் மனிதருடன், சுவனத்தில்
மருங்குதர ஆமீனடா. (37)

ஆக அத்தியாயம் 11-க்கு கூடிய பாடல்கள். 600

## 12-வது அத்தியாயம்

# ஒற்றுமையின் நன்றி

மெஞ்ஞானத் தங்கமெட்டு.

நல்விதம் வாழமனு நன்றொற்று மையாகும்
அல்லல்படா தொற்றுவாழ, எனதன்பரே
அருளுவதைக் காண்பீர்களே. (1)

ஒற்றுமையே நன்ருகு முயர்தாழ்ந்தோர் கள்எவர்க்கும்
சற்று வதின் தகமையை, எனதன்பரே
சாற்றவே கேட்பீர்களே. (2)

அற்ப கொசுக்கூட்டம் ஆகிலொற்று † மதகரியை
நற்கடியாற் கொன்றுவிடும், எனதன்பரே
நன்றொற்று மைநல்லதே. (3)

அறுபதடி வேங்கைதொலி அடவா யுரிக்கயொற்று
எறும்புகள் கூடிவிட்டால், எனதன்பரே
இலகுவாய்க் கழட்டிடுமே. (4)

† மதகரியை என்பது, மதங்கொண்ட யானையை என்றறிக.

கோரைப் பலஇடத்தில் கோணிக் கிடந்ததொற்று
ஊரை யடுக்கப் பாயாய், எனதன்பரே
‡ உயர்தலத்தில் விரிப்பதுவே. (5)

தேனீக்கள் ஒற்றுமையாய் தேன்கூடு கட்டியதில்
மானிடற்கு மதுர மூட்டல், எனதன்பரே
மதிப்பாம்ஈ ஒற்றுமையே. (6)

ஒத்து வாழாதகுடி உயர்வாகா தாழுமென்று
முத்துபோல் வாக்கியமிதை, எனதன்பரே
முன்னோர்கள் சொன்னார்களே. (7)

அண்ணன் தம்பியொற்று அடவாக வாழ்குடும்பம்
கண்ணிய மாய்வாழ்வதை, எனதன்பரே
கண்டொற்று வாழ்வீர்களே. (8)

முதலாளி யும்ஆளு முறையொற்று செய்வணிகம்
இதமாக விர்த்தியாகல், என் அன்பனே
ஏற்றஒத்து மைத்தானடா. (9)

கண்ரண்டு மொற்றுபார்க்க காணும்பல நுட்பமெல்லாம்
கண்ணொன்றை மூடி பார்த்தால், என் அன்பனே
கசடரக் காணாதடா. (10)

செவிரண்டு மொற்றுகேட்க சிறுபெரு சப்தங் கேட்கும்
செவியொன்றை யடைத்து கேட்டால், என் அன்பனே
செவ்வையாய் கேட்காதடா. (11)

கரங்கள் ரண்டுமொற்றால் கனபாரத் தைஎடுக்கும்
கரமொன்றி லெடுக்க பாரம், என் அன்பனே
காணாது ஏலாதடா. (12)

கால் இரண்டுமொற்றால் காதவழி யுஞ்செல்லும்
காலொன்றில் நடப்ப தென்றால், என் அன்பனே
கால்மயிலும் செல்லாதடா. (13)

‡ உயர்தல மென்பது, புண்ய க்ஷேத்திரங்களென்றறிக.

பத்தாவும் பாரியொற்று பதிவோ டிருப்பார்க்கு
உத்தார மணுகாதடா, என் அன்பனே
உயருமவாள் குடும்பமடா. (14)

வாழ்ந்தால் நீ ஒற்றுமையாய் வருமைவந் தாலுனக்கு
தாழ்த்தாம லாதரிப்பார், என் அன்பனே
தன்மையுடன் வாழ்வாயடா. (15)

ஒற்றில்லா நீவாழ்ந்தால் உனக்குத் துயரடுத்தால்
முற்றினு முனையொ ழிக்க, என் அன்பனே
முயற்சைபல செய்வாரடா. (16)

உறமுறை ஜனமொற்று யோசித்து செய்கருமம்
திறமாக நடைபெறலே, என் அன்பனே
திட்டமாய் காண்பாயடா. (17)

எவ்வேலே செய்தாலு மிதமாக ஒற்று எல்லா
மவ்வேலே செய்வதினல், என் அன்பனே
அதிற்குறை யணுகாதடா். (18)

ஒற்றில்லா செய்செயலால் உற்றஊர் ரண்டுபட்டு
முற்றுங்கெட்டு கீர்த்தி யும்போய், என் அன்பனே
மூத்தவ னுள்வானடா. (19)

அவனுட சிஷ்யர்கள் அங்குமிங்கு மாநுழைந்து
நவமான போதனே செய்து, என் அன்பனே
நடத்துவார் செங்கோலடா. (20)

உயிரு முடனும்போ லொற்றிருந்த ஊரவரை
வயிராக்கி யம்பூட்டியே, என் அன்பனே
வாதாடச் செய்வாரடா. (21)

முதலிலே மூர்க்கபேச்சு முற்றமுற்றப் பலஏச்சு
இதற்குபின் னடிதடியும், என் அன்பனே
எக்காள மிடல்கேளடா. (22)

குத்துக் கும்மாசண்டை கோர்ட்டுக்குள் புகுஞ்சண்டை
பத்துநூர் ஆயிரமாய், என் அன்பனே
பாழாக்கும் சண்டையடா. (23)

பிழைப்புந் தழைப்பும்விட்டுப் பேயனைப்போ லலையதொட்டு
உழைப்புமின் நாடாவிட்டு, என் அன்பனே
ஒருமித்து வருவாரடா. (24)

பலவக்கி லிடம்பேசல் பகரல் பிடிக்கவில்லை
கலகத்துக் கேற்றவக்கீல், என் அன்பனே
கண்டொற்றுப் பேசுவாரடா. (25)

வக்கீல்வா யாடிவக்கில் வந்தாலே போதுமென்று
முக்கியம்போய் தலைகவிழ்ந்து, என் அன்பனே
முறைசொல்லத் தொடுப்பாரடா. (26)

அவனடித்தான் இவனுதைத்தான் அந்தகன் பார்த்திருந்தான்
கவனமாய் பேசயிற் கேட்டோன், என் அன்பனே
காதுகேளா னென்பாரடா. 27)

ஓடிவந்து விலக்கினவன் ஒருகால் மொண்டியவன்
நாடியவன் விலக்கா விட்டால், என் அன்பனே
நாசமே ஊர் என்பாரடா. (28)

கேட்டவக் கீலப்போ கேசிதுவோ நல்லகேசு
போட்டவுடன் பலிக்கு மென்று, என் அன்பனே
புஞ்சிரிப்பாய் சொல்வாரடா. (29)

சாட்சிகள் நபர்ரண்டும் சரியான சாட்சிஎன்றும்
தாட்டியாய்சூட் செய்யு மென்று, என் அன்பனே
தகவல்பல சொல்வாரடா. (30)

தகவல்கள் சொல்லிவக்கீல் தாருமுன் பீசுஎன்க
அகமகிழ ஏன்றதுகை, என் அன்பனே
அளித்துக் கேஸ்தொடுப் பாரடா. (31)

போலீசு கோர்ட்டுமுன்னே போவர்மேஸ் டிரட்டுபின்னே
ஜோலிவிட்டுக் கலெக்டரிடம், என் அன்பனே
சூட்டுத்தாளை ஈட்டுவாரடா. (32)

அந்தக் கலெக்டரவர் ஆள்கள் திமிரறிந்து
இந்தஊர் அந்தஊர் என்று, என் அன்பனே
ஈரிங்கியால் இழுப்பாரடா. (33)

இழுத்துப் பலஊரில் இன்னமகாம் வாருமென்று
கொழுப்பிறங்கும் நோக்கங்களே, என் அன்பனே
குறிப்பாய்பார்த் திருப்பாரடா. (34)

ஒருகக்ஷி வக்கில்வரா துளவுத் தெரிந்தவுடன்
பெருமையாய் பெயர்கூப்பிட, ஒருகட்சிப்
பேயரைப்போல் திகைப்பாரடா. (35)

எங்கள் வக்கீல்சீக்கு இதமாய் தயவுசெய்து
தங்களிப்போ ஒருவாயிதா, எம்துரையே
தந்தருளு மென்பாரடா. (36)

ஏடுத்தேன் கேசைஎன்று மெங்கே வக்கீலென்றுங்
கொடுக்கேன் வாயிதா என்றும், என் அன்பனே
கோபித் துரைப்பாரடா. (37)

கோணலிங்கி லீஷரியார் கோபமூண்டக் கலெக்டரவர்
காணச்செய்வ தெதுவோ என்று, என் அன்பனே
கண்கலங்கி நிர்ப்பாரடா. (38)

பலகாலம் ஈரிங்கியால் பத்திருப தாயிரமாய்
செலவழித்துந் தீர்பெப்படி, என் அன்பனே
செப்புவபோ என்பாரடா. (39)

ஒருகக்ஷி யர்கெலிக்க உற்றவக்கீல் கக்ஷிதோர்க்க
தெருவிலே கெலித்தகக்ஷி, என் அன்பனே
தெம்மாங்கு செய்வாரடா. (40)

பூமாலைச் சூட்டுவதும் பூந்திமிட்டாய் பங்கிடலும்
ஆமாக ஏசிப்பேசி, என் அன்பனே
அட்டகாசம் செய்வாரடா. (41)

தோர்த்தக் கக்ஷிகேட்டுத் துயரபட்டு ஹைக்கோர்ட்
தீர்க்கமுடன் சென்றுஅபீல், என் அன்பனே
தீட்டவே தொடுப்பாரடா. (42)

இந்தஹை கோர்ட்டுக்கு ஏராள மாயழித்து
முந்திதோற்ற வர்கெலித்தால், என் அன்பனே
முன்ஜெயித்தோர்க் கீனமடா. (43)

ஈன முணர்ந்தகக்ஷி ஏக்கமுடன் புல்பெஞ்சு
தானவர்கள் சூட்டுசெய்ய, என் அன்பனே
தனமிக வழிப்பாரடா. (44)

புல்பெஞ்சில் தோர்த்தகக்ஷி போவார்பிரி கௌன்ஸல்
கல்நெஞ்சார் காசுஎல்லாம், என் அன்பனே
கரிசாம்ப லானதடா. (45)

அங்குமே தோர்த்தகக்ஷி அடங்காத் துயரமுற்று
பங்கத்துக் காளாகியே, என் அன்பனே
பரதவிப்பா ரல்பகலடா. (46)

இதற்குமே லேஅபீல் இல்லேயே என்றேங்கி
பிதற்றியே பேயரைப்போல, என் அன்பனே
பெருமூச்சு விடுவாரடா. (47)

பெருமூச்சு விடுவதேன் பேர்பொருளே யழிப்பதேன்
சிருமையி லாழ்வதுஏன், என் அன்பனே
செய்தசூட் கொடுமையடா. (48)

சூட்டுச் செய்தவர்கள் சூட்டுக்கோலேக் காயவைத்து
கோர்ட்டாரால் தன்பேரிலே, என் அன்பனே
கோடிழுக்கத் துணிந்தாரடா. (49)

கலித்தோர் தோத்தோரென்றுந் தோத்தோர் செத்தோரென்றும்
ஜொலிப்பாக முன்னோ ராய்ந்த, என் அன்பனே
சொல்பழு தாகாதடா. (50)

இப்படி பலவாண்டா யிடிபடவுங் குடிகெடவும்
ஒப்பமுடன் கண்ட ஊரார், என் அன்பனே
உபதேசஞ் செய்வாரடா. (51)

அடேபாவி யொற்றிருந்தா லடராது இக்கலகம்
கடேசீவரை செலவானதை, என் அன்பனே
கணக்கிட்டுப்பா ரென்பாரடா. (52)

நல்வழியில் செலவிடா நலிந்தக் குமர்முடிக்கா
கல்நெஞ்சார் காசுஎல்லாம், என் அன்பனே
கரியான தென்பாரடா. (53)

கலகத்தின் கக்ஷிரண்டுங் கண்டால் சலாமுமில்லா
நலம்பொலத்தி லொன்றுகூடா, என் அன்பனே
நாணமது குலேவாரடா. (54)

பெண்மக்க ளொருகக்ஷி பிள்ளைதாய் மருகக்ஷி
நண்பாய்செய் நலம்பொலத்தில், அவர்யாரோ
நாம்யாரோ என்பாரடா. (55)

பேசா தொன்றுக்கொன்று பிலத்தில்நாள் மூன்றின்மேல்
கூசாசெய் யவர்நலங்கள், வானுயரா
குணமதனுல் பெருகாரடா. (56)

தஸ்பீஃ தஹ்மீதும் தருமமும் வணக்கமும்
பிஸ்மில்சொல் பலன்களெதும், முறண்டுள்ளப்
பேதையர்க் கணுகாதடா. (58)

நாளும்நம் ஏட்டிலே நலம்பல வரைவதே
தாளும்படி யாய்செய்வது, ஒற்றில்லா
தவரஸ்த்தி வாரமடா. (59)

ஆகையா லறிவுள்ளோர் ஆகிடிற் கலகமெதும்
ஜாகையிதில் அல்லா(ஹ்)ரசூல், எனதன்பரே
சட்டம்பார்த் துணர்வார்களே. (60)

பொல்லாங் கெதுவுமுற்ருல் புகழ்பக்தி யுள்ளவர்பால்
சல்லாபங் கூறஎளிதில், எனதன்பரே
சஞ்சலந் தவிர்ப்பார்களே. (61)

கெட்டது நல்லதென்று கெணித்தொற்று வாழ்ந்தோருடன்
நட்டம்வரா தெம்மை எல்லாம், எனதன்பரே
நாயன்கார்க்க ஆமீனிதே. (62)

ஆக பாகம் 6-க்கு அத்யாயங்கள் 12-ல்கூடிய பாடல்கள். 662

சர்வமத சமரஸ போதினி ஆரும்பாகம் கடவுள்கிருபையால்
முற்றுப் பெற்றது.

# விளம்பரம்.

## புதிய கோர்வை.

மானிடராய்ப் பிறந்த எந்த மதத்தினரும், எந்த வகுப்பினரும் எந்த ஜாதியரும், பேதகமில்லா பொதுநல நீதிகளையும், பல உபதேசங்களையும் எளிதில் விளங்கவும், படிப்பவர்கள் கேட்பவர்கள் மனதுக்கு ஆனந்தமும், செவிக்கின்பமும் தரக்கூடிய இராகங்களான உடல் கூற்றுவண்ணம், ஆனந்தக்களிப்பு, மெஞ்ஞானத் தங்கம், சதகம் முதலிய மெட்டுகளால் கோர்வைசெய்து 6 பாகங்களாகப்பிரித்து 6 பாகத்திலும் டிம்மி சுமார் 94 பக்கங்கள் அச்சிட்டு கடவுள் கிருபையால் வெளிப்படுத்தப் பட்டதென்பதை அறிவீர்களாக:—

சர்வமத சமரஸபோதினி பாகம் 1-க்கு ரூ. 0–1–6
ஷை பாகம் 3-ம் சேர்ந்த புக் 1-க்கு ரூ. 0–4–0
ஷை பாகம் 6-ம் சேர்ந்த புக் 1-க்கு ரூ. 0–8–0
ஒருதார கொண்டாட்டம் (உணரார்படும்)
இருதார திண்டாட்டம் புக் 1-க்கு ரூ. 0–1–0



ஒருபுத்தகத்திற்கு வி. பி. செலவு அணா 4.
ஐந்து புத்தகங்களுக்கு வி. பி. செலவு அணா 6.

நேரில்பற்ற அல்லது, ஆர்டர் எழுத விலாசம்.

க. முஹம்மது இப்ருஹீம்,
அஹ்ஸன் புக் டிபோ,
மேல்விஷாரம் P. O., (நார்த்தார்க்காடு).

---

REGISTERED TRADE MARK.

## மனோரஞ்சித மன்மதபாண லேகியம்.

இழந்த ஆண்மைத்தனத்தையும் சிறுவயதில் கெட்டபழக்கத்தினால் உண்டான பலவீனத்தையும் கிழத்தனத்தையும்போக்கி தூக்கம், பசி, மலபிரவர்த்தியை உண்டாக்கி மன்மதனை போலாக்கும் சக்தியை தருகிறது. சாப்பிடுவதற்கு அமிர்தத்தைப்போலிருக்கும். பத்தியமில்லை.

20 நாட்களுக்கு ரூபா 3—0—0

ஆர்டருடன் தபால்சார்ஜ்சேர்த்து ரூபா 3—9—0 முன்னதாக அ[illegible] வேண்டும்.

*Sole Agents*:—R. J. RAM & CO.,
RAJARAJESWARI NILAYA[illegible]
51-C, Lloyd Road, Royapettah P. O., M[illegible]RAS.